**மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

**அசல் வழக்கு எண்.12/2020**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி., பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23 ஆம் நாள் செவ்வாய் கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.V.மகேஸ்வரி, இருக்கை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜீவானந்தம் | தந்தை பெயர் | : | மதுரைவீரன் |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 23.06.2026

**P.W. : 1**

**வாதிகள் தரப்பில் முதல் விசாரணை**

நான் 1ம் வாதி ஆவேன். எனது முதல் விசாரணைக்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். ஆவண எண்.1028/1930–ன் பதிவு நகல் **வா.சா.ஆ.1** ஆகும். என் பாட்டி முனியம்மாளின் இறப்பு சான்றிதழ் நோட்டரைஸைடு நகல் **வா.சா.ஆ.2** ஆகும். என் தாய் மாமா ராஜ மாணிக்கத்தின் இறப்பு சான்றிதழ் நோட்டரைஸைடு நகல் **வா.சா.ஆ.3** ஆகும். ராஜ மாணிக்கம் வாரிசு சான்றிதழ் தொடர்பாக திருச்சிராப்பள்ளி

வட்டாட்சியர் அலுவலகத்தில் 03.07.2025 அன்று வழங்கப்பட்ட பதில் **வா.சா.ஆ.4** ஆகும். என் பெரியம்மா பங்கஜவள்ளியின் இறப்பு சான்றிதழ் நோட்டரைஸ்டு நகல் **வா.சா.ஆ.5** ஆகும். என் தாய்மாமா மார்கேசனின் இறப்பு சான்றிதழ் நோட்டரைஸ்டு நகல் **வா.சா.ஆ.6** ஆகும். என் தாயார் ரஞ்சிதத்தின் இறப்பு சான்றிதழ் நோட்டரைஸ்டு நகல் **வா.சா.ஆ.7** ஆகும். எனது தாயார் ரஞ்சிதத்தின் வாரிசு சான்றிதழ் நோட்டரைஸ்டு நகல் **வா.சா.ஆ.8** ஆகும். திருச்சிராப்பள்ளி மாவட்ட உரிமையில் நீதிமன்ற அ.வ.எண்.19/2014 வழக்குரையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.9** ஆகும். மேற்படி வழக்கில் அந்த 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.10** ஆகும். மேற்படி வழக்கில் 22.10.2017 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.11** ஆகும். மேற்படி வழக்கின் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.12** ஆகும். அதை எதிர்த்து திருச்சி 4வது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த AS No.31/2018 வழக்கின் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.13** ஆகும். அந்த மேல்முறையீட்டின் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.14** ஆகும்.

**(வேண்டுகோளின்படி முதல்விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.